**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**தே.செ.வெ.எண்.85** **நாள்: 12.04.2026**

**சென்னை மாவட்டத்தில் 100% வாக்களிப்பதன் அவசியம் குறித்து நாட்டுப்புற கலைஞர்களின் கலைநிகழ்ச்சிகள் வாயிலாக வாக்காளர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது.**

தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத் தேர்தல்-2026னை முன்னிட்டு, சென்னை மாவட்டத்திற்குட்பட்ட 16 சட்டமன்றத் தொகுதிகளிலும் 100% வாக்களிப்பதன் அவசியத்தை வலியுறுத்தி வாக்காளர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில், "தேர்தல் திருவிழா – தமிழ்நாட்டின் பெருவிழா" எனும் தேர்தல் விழிப்புணர்வு நிகழ்ச்சி பல்வேறு வகைகளில் நடத்தப்பட்டு வருகிறது.

இதன் ஒரு பகுதியாக, இன்று (12.04.2026) இராயபுரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட காசிமேடு பகுதியில் நாட்டுப்புற நடனம், இசைக்குழு, கானா, டிஜே, திடீர் நடனக் குழு (Flashmob) மூலமும், டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட வண்ணாரப்பேட்டை மெட்ரோ இரயில் நிலையத்தில் வெளிப்பகுதியில் நாட்டுப்புறக் கலை நிகழ்ச்சிகள் மூலமும், திரு.வி.க.நகர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட, புளியந்தோப்பு குடியிருப்புப் பகுதிகளில் புலியாட்டம் மற்றும் டோல் மூலமும், தியாகராயநகர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட தியாகராயநகர் பேருந்து நிலையத்தில் நாட்டுப்புறக் கலைகள் மற்றும் மல்லர் கம்பம் மூலமும், ஆயிரம் விளக்கு சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட தேனாம்பேட்டை சிக்னல் அருகில் பிரச்சாரம் மற்றும் மாஸ்காட் மூலமும், திரு.வி.க.நகர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட, திரு.வி.க. பூங்காவில் பறை, நாட்டுப்புற நடனம், சிலம்பம், புலியாட்டம், கரோக்கி உள்ளிட்ட கலைநிகழ்ச்சிகள் வாயிலாக 100% வாக்களிப்பதன் அவசியம் தொடர்பான தேர்தல் விழிப்புணர்வு பதாகைகளுடன் வாக்காளர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தி துண்டுப்பிரசுரங்கள் வழங்கப்பட்டது.

மேலும், சென்னை மாவட்டத்திற்குட்பட்ட 16 சட்டமன்றத் தொகுதிகளிலும் வாக்காளர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்திடும் வகையில் பொதுமக்கள் அதிகம் கூடுமிடங்களான பேருந்து நிலையங்கள், இரயில் நிலையங்கள், மெட்ரோ இரயில் நிலையங்கள், பெரிய அங்காடிகள், மால்கள், கடற்கரைப் பகுதிகள் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் தேர்தல் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு துண்டுப்பிரசுரங்கள் வாக்காளர்களுக்கு வழங்கப்பட்டு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

**"தேர்தல் திருவிழா – தமிழ்நாட்டின் பெருவிழா"**

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**